**திரு. நா. வீராசாமி:** எனக்குக் கேள்வி கேட்பது எப்படி என்று திரு. கிருஷ்ணமூர்த்தி சொல்லவேண்டாம் அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு பதில் அளிக்க வேண்டும். இதிலே முக்கியமான பிரச்னை என்னவென்றால், அறிக்கையில் சில குறிப்புகள் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "வேஜ் கைய்ட்லைன்ஸ் கமிட்டி".

MR. DEPUTY SPEAKER : I have passed over to the next subject. உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. நா. வீராசாமி:** 6 பக்கம் அறிக்கையைப் படித்து விட்டு, கேள்வி போட வேண்டும் என்றால், ஒரு கேள்வி தான் அனுமதி கொடுத்தீர்கள். ரூல் 41-ன் கீழ் இது கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயம் ஆகும். இப்படிக் கேள்வி கேட்க அனுமதிக்காமல் செல்வது நியாயமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தப் பிரச்னையைவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றாகி விட்டது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற விஷயங்களைப் பெறவேண்டுமென்றால், குறுகிய கால கேள்வி போடலாம். குறுகிய கால கேள்வி என்று வருகிறபோது, வருகின்ற நாட்களில் அமைச்சர் பதில் அளிப்பார்கள்.

**7. 1975-76-ம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— தொடர்ச்சி**

**நிதிக்கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.**

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,00,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".